**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 158/2018**

Prosecution witness : 1

| | |
|---|---|
| Name: அழகுமுத்து | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused present

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 21.08.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது தல்லாகுளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 10.03.2017ம் தேதி அவணியாபுரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 12.00 மணியளவில் த.கா.1717-திரு.கண்ணன், த.கா.3535-திரு.பவுன்ராஜ் ஆகியோர்களுடன் சரக ரோந்தாக ராஜமாநகர் கண்மாய் அருகில் சென்றபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அங்கு சந்தேகப்படும்படியாக கேரிபையுடன் நின்றிருந்த ஒரு நபர் போலீஸ்பார்ட்டியை கண்டவுடன் ஓட எத்தனித்தார். அவரை பிடித்து விசாரித்தபோது மணிகண்டன் என்ற பங்குமணி, த/பெ.மோகன்தாஸ், போஸ்ட்ஆபீஸ் தெரு, இந்திரா நகர், சிந்தாமணி, மதுரை என பெயர்விலாசம் கூறினார். நான் அவரிடம் உங்களிடம் அரசால் தடைசெய்யப்பட்ட மற்றும் மனித உயிருக்கு கேடு விளைவிக்கும் போதைப்பொருள் இருப்பதாக சந்தேகப்படுகிறேன். உங்களை அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்து சென்று சோதனையிடவா அல்லது நானே சோதனையிடவா என்று கேட்டதற்கு தாங்களே என்னை சோதனையிடலாம் என

12.15 மணிக்கு சோதனை சம்மத கடிதம் கொடுத்தார். அதன் பேரில் அவர் வைத்திருந்த கேரிபையை சோதனையிட்டபோது அதில் 1கிலோ 250கிராம் கஞ்சா என்ற போதைப்பொருளும் ரூ.5,200/- பணமும் இருந்தது. கேரிப்பையில் இருந்த கஞ்சாவில் இருந்து 100கிராம் கஞ்சாவை மாதிரிக்காக பிரித்து எடுத்து அதனை ஒரு காக்கி கலர் கவரில் மடித்தும், மீதம் இருந்த 1கிலோ 150கிராம் கஞ்சாவை கேரிப்பையுடன் சேர்த்து மற்றொரு காக்கி கலர் கவரில் மடித்து அரக்கினால் போலீஸ்பட்டன் சீல் வைத்தேன். அந்த இடத்தில் வெளி நபர்கள் சாட்சியாக இல்லாததால் என்னுடன் வந்த போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் 12.30 மணிக்கு கஞ்சாவையும், பணத்தையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி கஞ்சா பற்றி மேற்படி நபரிடம் கேட்டபோது தான் வருசநாடு பகுதிக்கு சென்று இனம் தெரியாத நபரிடம் கஞ்சா வாங்கி வந்து விற்று வருவதாக கூறினார். எனவே, மேற்படி குற்றத்திற்காக 12.45 மணிக்கு மணிகண்டன் என்ற பங்கு மணி என்பவரை கைது செய்தேன். மேற்படி நபரையும், அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து 13.15மணிக்கு நிலைய குற்ற எண்.320/2017, ச/பி.8(c) r/w 20(b)(ii)(B)NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

ஓட எத்தனித்தவரை எந்த போலீசார் எதிரியை பிடித்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் என்னுடன் வந்த இரண்டு தலைமைக்காவலர்கள் பிடித்தார்கள். அவணியாபுரம் காவல்நிலையத்தில் நான் பணியில் இருந்த காலத்தில் எதிரியின் மீது வழக்கு இருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரியை வழக்குக்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது எந்த உபகரணம் மூலம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருளை எடைபோட்டோம் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஆனால் மின்னணு தராசு மூலம் எடைபோட்டேன். சோதனை சம்மத கடிதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் யாரும்

அவ்விடத்தில் இல்லை. பொதுவாக ஒரு நபரை கைதுசெய்யவேண்டும் என்றால் முதலில் கைது செய்யவேண்டும், பின்னர் அத்தாட்சி தயாரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. பொதுவாக அத்தாட்சி, சோதனை சம்மத கடிதம் தயார் செய்த இடத்தில் குற்ற எண் அந்த இடத்திலேயே கொடுக்க முடியுமா என்றால் அந்த இடத்தில் கொடுக்கமுடியாது, காவல்நிலையத்தில் தகவல் கேட்டு கொடுக்கலாம். புகார்தாரரே வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யமுடியாது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லும் பொருட்களை ஆய்வாளரிடத்தில் எந்த தேதியில், எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்று என்னால் துல்லியமாக சொல்லமுடியுமா என்றால் 10.03.2017 அன்று 13.15 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கின் கோப்புகளுடன், வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். நான் ஒப்படைத்தாக சொல்லும் பொருட்களின் மேல் முத்திரை, குற்றஎண், என்னுடைய கையொப்பம் இட்டு ஆய்வாளரிடம் விசாரணைக்கு கொடுத்தேனா என்றால் முத்திரை வைத்தேன் அதில் குற்றஎண் குறிப்பிட்டேனா என்றால் ஞாபகம் இல்லை. அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், நான் சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் நான் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும், சான்றுப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் புள்ளிவிபரக்கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எத்தனித்து ஓடவில்லை என்றாலும் வீட்டில் இருந்தவரை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து இந்த வழக்கை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல.